மலர் 1 இதழ் 1 ஜூலை, 2016 ISSN : 2454-3993

# நூலினை முன்வைத்து உரையாடுவோம்

**முனைவர் ம.க. பெரியசாமிராஜா**
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த் துறை,
செந்தில்குமார் நாடார் கல்லூரி,
விருதுநகர்

'தமிழும் சமக்கிருதமும்' என்கிற நூல் தேவபேரின்பன் எழுதியுள்ள கட்டுரைகளின் தொகுப்பாகும். இரா.நாகசாமி எழுதிய 'The Mirror of Tamil and Sanskrit' (2012) என்னும் ஆங்கில நூலுக்கான மறுப்புரையாகவே 'தமிழும் சமக்கிருதமும்' எழுதப் பெற்றுள்ளது. "இரா.நாகசாமியின் நூலினுள் காணப்படும் கட்டுரைகளுள் தமிழுக்கும் சமக்கிருதத்திற்குமான தொடர்பு குறித்தான, கட்டுரைகள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதாக", தேவ. பேரின்பன் குறிப்பிடுகிறார். நூலினது தலையாய பணியினை அதன் உட்தலைப்பான 'பொய்யும் மெய்யும்' விளக்குகிறது. தேவ. பேரின்பன், இரா. நாகசாமியின் கருத்துகளைச் சான்றுகளுடன் மறுத்துள்ளார்.

'தமிழும் சமக்கிருதமும்' நூலினுடைய சிறப்பாக இருப்பது மையப்பொருளின் விவாதத்தினூடாகத் தமிழ்ச்சமூகம் குறித்த புதிய வரலாற்றியலுக்கான அடிப்படைகளும், அவசியமும் வலியுறுத்தப்படுவதாகும். இந்நூல் ஆக்கம் பெறக் காரணமான 'மதுரை, பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையம்' மற்றும் 'காவேரிப்பட்டினம், பெண்ணையாறு தொல்லியல் சங்கம்' சார்பில் இரண்டாம் பதிப்பாக வெளியிட்ட புது எழுத்துப் பதிப்பகத்தார் ஆகியோரின் பணி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கூடுதலாகத் தொல்லியல் அறிஞர் முனைவர் சொ.சாந்தலிங்கம் அவர்களது 'தமிழ் எழுத்து முறையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்கிற கட்டுரையும், தொல்லியல் அறிஞர் கா.ராஜன் அவர்களின் அகழ்வாய்வு வண்ணப்படங்களும் இணைக்கப்பட்டு தற்போது இந்நூல் வெளிவந்துள்ளது.

இரா. நாகசாமி ஆய்வு என்ற பெயரில் முன் வைத்த பொய்யுரைகள் தமிழ் ஆர்வலர்களிடையேயும், அறிஞர்களிடையேயும் பெரும் விமர்சனத்தை ஏற்படுத்தியது. சென்னையில் முனைவர் பொற்கோ, திருச்சியில் முனைவர் க.நெடுஞ்செழியன், மதுரையில் முனைவர் தமிழண்ணல் ஆகியோரால் பொய் மறுப்பு மற்றும் உண்மை விளக்கும் வகையிலான நிகழ்வுகள் ஒருங்கிணைக்கப்பட்டன. 'நாகசாமி'யின் நாசவேலை' என க.நெடுஞ்செழியன் எழுத்து வடிவிலும், எதிர்வினை ஆற்றியிருந்தார். அவ்வகையில் நாகசாமியின் நாசவேலைகளுக்கு விரிவான மறுப்புரைகளுடன் வெளிவந்துள்ளதே தேவ.பேரின்பன் அவர்களது 'தமிழும் சமக்கிருதமும்' என்ற நூலாகும். மேற்கண்ட இந்நூல் குறித்த மதிப்புரை/ கருத்துரை என்பதோடு அதனை முன்வைத்து நிகழ்த்தப்பட்டுள்ள உரையாடலே இந்தக் கட்டுரை. தேவ. பேரின்பனின் மொழி குறித்த கருத்தாக்கங்கள், வடமொழி குறித்த கருத்தாடல்கள், இரா. நாகசாமி தவறிழைக்கும் இடங்கள், தேவ.பேரின்பன் சிறப்புறும் கூறுகள், தேவ.பேரின்பன் சறுக்குமிடங்கள், அடிப்படைப் பிரச்சனைகள் மற்றும் இன்று வேண்டுவன ஆகிய உட்தலைப்புகளுடன் இது அமையப் பெற்றுள்ளது.

**தேவ.பேரின்பனின் மொழி குறித்த கருத்தாக்கங்கள்**

இந்நூலில் தேவ.பேரின்பன் கையாண்டுள்ள மொழி தொடர்பான கருத்துக்கள் பின்வருமாறு:

‘ஒவ்வொரு மொழியும் அது பேசப்படும் சமூகத்தின் விளைவே ஆகும்.’

‘சமூகத்தின் உள்இயக்கத்தின் விளைவே மொழியாகும்’

‘எந்தவொரு மொழியும் அந்த மொழி பேசப்படும் சமூகத்தின் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டதேயாகும்.’

‘எந்த மொழியும் அந்த மொழி பேசும் மக்களின் சொந்த வாழ்வின், வளர்ச்சியின், பண்பாட்டின் விளைவுதான்.’

‘சமூக வளர்ச்சியின் போக்கோடு தன்னைத் தகவமைத்துக் கொண்டு, சமூகத்தின் வளர்ச்சியோடு தன்னை வளர்த்துக் கொள்வதே மொழி.’

‘மனித சிந்தனை மற்றும் உணர்வின் வடிவம் என்ற வகையில் வரலாற்றுப்பூர்வமான சமூக வாழ்க்கை மாற்றங்களை மொழி பிரதிபலிக்கிறது.’

‘எழுத்து மொழி தோன்றுவதற்கான தயார் நிலையில் ஒரு சமூகம் இல்லையெனில் அந்த சமூகத்தில் வெளியிலிருந்து எழுத்து மொழி எதுவும் நுழைந்துவிட முடியாது.’

‘சமூக நிலைமைகளும் செயல்பாடும் கணக்கில் கொள்ளப்படாமல் மொழியின் வரலாற்றை எழுத முடியாது.’

‘எந்த மொழியும் அறிவியல் யுகத்தில் ஜனநாயகத்தன்மையைப் பெற்றாக வேண்டும்.’

‘பிற மொழிகளுடனான தொடர்பு ஒரு மொழியின் இயல்பை அழித்துவிட அனுமதிக்கக் கூடாது.’

மேற்கண்ட கருத்தாக்கங்களில் எந்த ஒன்றின் வழியாக எண்ணத் தலைப்பட்டாலும் கூட மொழிப்பாசிசம், மொழித்திணிப்பு, மொழி ஆதிக்கம், மொழி வெறி போன்ற எதுவும் நிகழாது. ஆனால் பிரிட்டிஷ் காலனிய இந்தியாவிலும் குடியரசு இந்திய ஒன்றியத்திலும் நிகழ்ந்த சமஸ்கிருத, இந்தி மொழிகள்சார் மேலாண்மைச் செயல்பாடுகளும், இந்தித்திணிப்புக் கட்டாய நடவடிக்கைகளும் மொழி குறித்த குறைந்தபட்ச இந்தித்திணிப்புக் கட்டாய நடவடிக்கைகளும் மொழி குறித்த குறைந்தபட்ச அடிப்படைப் புரிதல்கூடச் சிலருக்கு இல்லையோ என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது. மேலும் பல எழுத்து வடிவங்களுள் தேவநாகரி எழுத்து வடிவத்தில் எழுதப்பெறும் இந்திக்கு மட்டும் அளிக்கப்பட்ட முதன்மையும், முக்கியத்துவமும் ஏற்றுக்கொண்ட மாநிலங்களில் அம்மக்களுடைய பேச்சு மொழியாகவும், வழக்கு மொழியாகவும் இருந்து வந்த பல மொழிகள் இன்று வழக்கிழந்து போயிருப்பதை வரலாறு உணர்த்தி நிற்கிறது. மீளவும் ஒற்றை மொழி, புனித மொழி, தேசிய மொழி போன்ற கோஷங்கள் மொழி அடிப்படைவாதிகளால் வலிந்து ஒலிக்கப்படத் தொடங்கியுள்ள இத்தருணத்தில் தேவ. பேரின்பன் முன்வைக்கும் மொழி குறித்த கருத்தாக்கங்கள், பண்டைய அறிவுசார் குடிமைச் சமூகத்தின் வழிப்பட்ட ஜனநாயகக் குரலாகவே உள்ளன.

**வடமொழி குறித்த கருத்தாடல்கள்**

வடமொழி, தென்மொழி / சமக்கிருதம், தமிழ் என்னும் இருமை அடிப்படையில் நிலவுகிற பலவிதமான கருத்தியல்களைத் தாண்டி வடமொழியின் வேர் குறித்த தெளிவான ஆய்விற்குரிய தொடக்கத்திற்கு தேவ. பேரின்பனின் கருத்துக்கள் திறப்பாக உள்ளன. அவை பின்வருமாறு:

‘சமக்கிருதம் மக்கள் பேசிய வாய்மொழியிலிருந்து இயல்பாக உருவாகிவிடவில்லை.’

‘சமக்கிருதம் மக்களால் பேசப்படாத மொழி தான். ஆனால், இலக்கிய மொழியாகப் பல நூற்றாண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.’

'சமக்கிருதம் ஆட்சியாளர்களால் பாதுகாக்கப்பட்டு வளப்படுத்தப்பட்டுள்ளது.'

'ஆட்சியாளர்களின் ஆதரவின்றிச் சமக்கிருத இலக்கியங்கள் எதுவும் உருவாகிவிடவில்லை.'

'சப்தமே சமக்கிருதத்தின் அடிப்படை. சப்த அடிப்படையிலான சொற்களே சமக்கிருதச் சொற்கள்.'

'மொழியியல் கோட்பாடுகள் அடிப்படையில் தமிழின் வரலாற்றை விளக்க முடியும். உலகின் எல்லா மொழிகளின் வரலாற்றையும் விளக்க முடியும். ஆனால் சமக்கிருதத்தை மட்டும் விளக்க முடியாது. ஏனெனில் அது என்றுமே மக்களின் மொழியாக இருந்ததில்லை.'

'19ம் நூற்றாண்டின் இறுதியில் காலனிய இந்தியாவில் வெளியிடப்பட்டுள்ள மொழிகளின் ஆய்வில் இந்தியாவில் 179 மொழிகளும் 544 பேச்சு மொழிகளும் மக்களிடையே வழக்கத்தில் இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. அதில் சமக்கிருதம் இடம் பெறவில்லை.

'சமக்கிருதத்திற்கு எதிரான குரல் மகாவீரரிடமிருந்தே முதலில் வருகிறது.'

'பௌத்தத்தில் சமக்கிருதத்தை நுழைத்தது மகாயனமே ஆகும்.'

'சமக்கிருதத்தின் முதல் காப்பியமான புத்த சரித்திரம் எழுதிய அஸ்வகோசர் புத்தரை விஷ்ணுவின் அவதாரமாகக் காட்டினார்.'

'தமிழில் காணப்படும் சமக்கிருதம் முதலில் பௌத்தம் வழியிலான சமக்கிருதமாக இருந்து பின்னர் பிராமண, வைதிக சமக்கிருதமாக மாறியது.'

'தமிழ் வேத சமக்கிருதம். சமண–பௌத்த சமக்கிரும் இரண்டோடும் தொடர்புடையது.'

மொழி என்பது மக்களுடைய கூட்டு உழைப்பின் விளைவே ஆகும். ஆனால் சமக்கிருதம் அவ்வாறு இருந்ததற்கான ஆதாரமில்லை. மாறாகப் புலமைத்துவத்தின் காரணமாகச் செயற்கையாகச் செய்யப்பட்ட மொழியாகவே உள்ளது. 'அதனை இந்துமதம்/ இனம் / நாடு / இரத்த உறவுள்ள மக்கள்/ மக்கள் கூட்டம் என்று தொடர்புபடுத்தியவர் மார்க்ஸ்முல்லர் என்பதையும் பின்னாளில் ஈஸ்வர சந்திர வித்யாசாகர், 'ஆரியர்களின் வேதகாலத்தை மறுக்கட்டமைப்பு' செய்யும் வேலையினைத் துவக்கியதன் விளைவாக வரலாறாக மாற்றி ஆக்கியதையும் குறிப்பிடுகிறார்.

**இரா. நாகசாமி தவறிழைக்குமிடங்கள்**

தொல்லியல் அறிஞர் இரா.நாகசாமி ஆய்வு நோக்கின்றிச் சொல்லிச் சென்றுள்ள கருத்துக்களை அவருடைய நூலில் காண முடிகின்றது. அவற்றுள் சிலவற்றையேனும் பார்ப்பது அவசியமாகும்.

'வேத சமஸ்கிருத மரபுகளை ஏற்றுக் கொண்டதன் மூலம் குறிப்பாகத் தனது உருவாக்கக் காலகட்டங்களில் பிராமணர்களின் உதவியோடு தமிழ் செம்மொழித் தகுதியைப் பெற்றது.'

'வேதக் கடவுள்களையே பழந்தமிழர்களும் வழிபட்டனர்.'

'வேளாளர்கள் உள்ளிட்ட பெரும்பான்மையான மக்கள் வேதங்களையும் வேதாந்தங்களையும் பயின்றனர்.'

'குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற தமிழர் வாழ்வின் ஐந்து பிரிவும் பரத நாட்டிய சாஸ்திரத்தில் சுக்ஷியங்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.'

'யக்ஞவல்கியர், வசிஷ்டர், நாரதர், மனு, பிரகஸ்பதி, பராசரர் போன்ற வேதரிஷிகள் தொகுத்த தர்மசாத்திரங்களின் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டே நீதி நிர்வாகம் நடந்தது.'

'சரஸ்வதிப் பள்ளத்தாக்கில் அசோகர் காலத்தில் பிராமணர்கள் கண்டறிந்ததால் அது பிராமி என்றழைக்கப்பட்டது.'

'சமக்கிருதம் வேத உபநிடதங்கள்/ பிராமணர்களின் மொழி, தமிழோ சமக்கிருதத்தின் கண்ணாடிப் பிரதிபலிப்புதான்.'

'அசோகருக்கு முன்பு தமிழுக்கு எழுத்து எதுவுமில்லை'.

'சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் வேதங்களையும் அவற்றின் சாரத்தையும் தமிழில் அளிப்பதாகக் குறிப்பிட்டனர்.'

'சமக்கிருதத்தால் பெறப்பட்டதே தமிழின் வளர்ச்சியும் செம்மொழித்தகுதியும்.'

'ஒருகாலத்தில் ஐராவதம் மகாதேவன் தமிழ்நாட்டிலுள்ள பிராமியைத் 'தமிழ் பிராமி' என்றழைத்தபோது அதனைத் 'தாமிழி – தமிழி' என்றே அழைக்கலாம். அது தமிழ்நாட்டிலேயே தோன்றிய தமிழ்தான் என்றவர் இரா. நாகசாமி' என்பதையும் தேவ.பேரின்பன் பதிவு செய்கிறார்.

**தேவ.பேரின்பன் சிறப்புறும் கூறுகள்**

தமிழ் ஆய்வுலகிற்கான சில அடிப்படை உண்மைகளை இந்நூலில் தெறிப்பாகப் பயன்படுத்தியுள்ள வகையில் தேவ.பேரின்பன் சிறப்புறும் கூறுகளாகக் கீழ்காண்பவற்றைக் குறிப்பிடலாம்.

'மொழி குறித்த அறிவுப்பூர்வமான கருத்தாக்கங்கள் வழி 'வடமொழி என்னும் சமக்கிருதம் தொடர்பான அவரது கருத்தாடல்கள்' முக்கியமானவையாகும். அவை:

மொழியியல் கோட்பாடுகள் அடிப்படையில் தமிழ் உள்ளிட்ட உலகின் எல்லா மொழிகளின் வரலாற்றையும் விளக்க முடியும். ஆனால் சமக்கிருதத்தை மட்டும் விளக்க முடியாது.

ஏனெனில் மக்கள் பேசிய உயிருள்ள வாய்மொழியிலிருந்து அது இயல்பாக உருவாகிவிடவில்லை. மாறாகத் தமிழ் உயிருள்ளதிலிருந்து உருவானது.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற தமிழர் கொள்கை சமக்கிருதத்திலிருந்து, தமிழ் பெற்றதாக இரா.நாகசாமி சொல்ல முடியாது. ஏனெனில் அவர் நம்பும் சமக்கிருதம் மனிதர் யாவரும் சமம் என்பதை ஏற்பதில்லை.'

'குறிப்பிட்ட நிலப்பரப்பில் நிலைத்து வாழ்ந்த குடிகளில், சிக்கலான சமூக அமைப்பில் தகவல்களைப் பதிவு செய்ய வேண்டிய அவசியம் இருந்தது. இதன் காரணமாகவே எண்ணும் எழுத்தும் தோன்றின.'

'சமக்கிருதத்திற்குத் தனி வரிவடிவம் இருந்ததாக இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.'

'சரஸ்வதி நாகரிகத்தின் சரஸ்வதி வரி வடிவங்கள் இன்றுவரை கண்டறியப்படவில்லை. அக்பர் காலத்தில் தேவநாகரிக வரிவடிவ நூல்களும் தேவநாகரிக வரிவடிவமில்லாத நூல்களும் இருந்துள்ளன.'

'அக்பர் காலத்திற்குப் பிறகே சமக்கிருதத்திற்குகான தேவநாரி எழுத்துமுறை வந்தது.'

'வரலாற்று உண்மை இவ்வாறு இருக்க, தமது வேத–கடவுள் மொழியான சமக்கிருதத்திற்கான சொந்த வடிவம் கண்டறிய இயலாத பிராமணர்கள் பிராமியைக் கண்டறிந்ததாகக் கூறுவது ஏற்கத்தக்கதாக இல்லை.'

போன்ற கருத்துக்களோடு, 'தெற்கில் வர்ணம் இல்லை' என்பதையும் குறிப்பிட்டுள்ளார். மேலும் ஆசீவகம் பற்றியும் பேசியுள்ளது. வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஒரு கட்டத்தில்

க.நெடுஞ்செழியன் 'ஆசீவகம் தமிழகத்தில் தோன்றிய சமயமே என்பது கண்டறியப்படாமலோ / சொல்லப்படாமலோ இருந்திருந்தால் சீவகம் குறித்த இத்தகைய அறிவுலக 'விலக்க மனநிலை' உருவாகியிருக்காது.

### தேவ.பேரின்பன் சறுக்குமிடங்கள்

சமூக இயங்கியல் குறித்து ஆழமான புரிதலுடைய தேவ.பேரின்பன் சில இடங்களில் அவரையுமறியாமல் சறுக்கியுள்ளதையும் காணமுடிகிறது. அவருக்கு மட்டுமின்றி கணிசமான பேரை ஆட்கொண்டுள்ள ஒருவித செயற்கைத்தன்மையே அதற்குக் காரணமாகும். முதலில் அந்தப் புள்ளிகளையும் பின் அவற்றிற்கான காரணகாரியங்களையும் காணலாம். மொழி குறித்து ஆழமான தெளிவினைக் கொண்டிருந்தபோதும் 'மொழி அரசியல்' என்று வருகிறபோது வரலாற்றின் எதார்த்த நிலைகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், உருவாக்கப்பட்ட சொல்லாடல்களின் வழி மட்டுமே விடை காண முயற்சித்துள்ளார்.

'மொழி அரசியல், மொழி மேலாண்மை மற்றும் அதன் எதிர்வினை ஆகியவை ஆங்கிலக் காலனிய காலத்திலிருந்தே தொடங்கியதாகக் குறிப்பிடுகிறார்.'

'தமிழ்ச் சமூகம் உருவாக்கிக் கொண்ட அறமானது சமணம், பௌத்தம் சார்ந்தது.'

'தமிழ் மொழிக்கான இலக்கணம் வகுப்பதில் சமணர்களும், பௌத்தர்களுமே பெரும் பங்காற்றியுள்ளனர்' என்றும் பதிவு செய்துள்ளார்.

இவை கூறப்பட்டதைத் திருப்பிக் கூறும் முறையாக மட்டுமே உள்ளன. ஆனால், அவர் குறிப்பிடும் வேறு சில கருத்துக்களோ அந்த முறையினையும் தாண்டி சிலரால் ஏற்படுத்தப்பட்ட அறிவுக் கடிவாளத்தின் வழி மட்டுமே பார்க்கப்பட்டுள்ளதைக் காட்டி நிற்கின்றன.

'இனவாத அரசியலின் அடாவடித்தனத்தால் (தமிழ்) அறிவியல் தன்மை பெறுவதில் சிக்கல்கள் உள்ளன.'

'தனித்தமிழ் மொழி வன்முறை ஒன்றும் உருவாகிவிட்டது.'

'இனப்பெருமித அரசியல் தமிழ்ச்சங்கம் குறித்த அறிவியல்பூர்வமான ஆய்வுகளின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது.'

'தமிழ்தான் எல்லாம், சமக்கிருதம்தான் எல்லாம் என்ற இரு முகாம்களுமே புறநிலைப்பட்ட வரலாற்றியலுக்கு உடன்படாதவை.'

'சமக்கிருதம் கடவுளின் மொழி என்று போற்றப்பட்டதைப் போலத் தமிழும் அன்னைத்தமிழ் எனப் போற்றப்பட்டது.'

சமக்கிருத, இந்தி மொழித் திணிப்பிற்கு எதிராக எழுந்த தமிழர்களின் இயல்பான உரிமைக் குரலைச் சரியாகப் புரிந்து கொள்ளாத தன்மையே தமிழ், சமக்கிருதம் இரண்டையும் பொத்தாம் பொதுவாகப் பார்க்கும் பார்வையாகும். சமக்கிருதம் தொடர்பான புனையப்பட்ட கருத்துக்களையும் தமிழ் தொடர்பான மதிப்பீடுகளையும் சமமாகப் பார்ப்பது அறிவுச்செயலாகாது.

### அடிப்படைப் பிரச்சனைகள்

இலக்கியத்திற்காகச் செய்யப்பட்ட சில நூல் ஆக்கங்களைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட ஆவண (பிரேம்) மொழியையும், மக்களின் கூட்டு உழைப்பால் உருவான இயன் மொழியையும் ஒப்பிடுவதிலிருந்தே நமது ஆய்வுகள் எந்த நிலையில் உள்ளன என்பது விளங்கிவிடும். பால், சாதி, மத, வர்க்க, இன அடிப்படையில் ஒடுக்குமுறையினை செலுத்துகிற மனிதரது/ சமூகத்தின் நடவடிக்கைகளையும், அத்தகைய ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுகிற மனிதரது/

சமூகங்களின் செயல்பாடுகளையும் ஒரே விதமாகப் பார்க்க முற்படுகிற தவறான போக்கினை ஒத்தவைதான் மேற்சொல்லப்பட்ட ஒப்பீடுகள். மேலும் சமக்கிருதத்துடன் சமண, பௌத்த சமயங்களுக்குரிய சார்பு இங்கு கவனப்படுத்தப்படுவதே இல்லை. ‘சமக்கிருதத்திற்கு வழங்குவது போல் தமிழுக்கும் வழங்குங்கள்’ எனப் பெருந்தன்மையாகக் கூறுவதைப் போன்ற சிலரது சமக்கிருத ஆதரவு நுண் அரசியலையும் காண முடிகிறது. மக்களின் வழக்கிலிருந்து மறைந்து விட்ட மொழி என்ற வாதத்தை ஒரு பேச்சுக்கு வைத்துக்கொண்டாலும் குடியரசான இந்திய ஒன்றியத்தில் அவ்வாறு நூற்றுக்கணக்கான பல மொழிகளிருக்க சமக்கிருதத்திற்கு வாரி வழங்குவது போல் இல்லையாயினும் அந்த மதிப்பில் ஒரு சதவீதம் கூட அத்தகைய மொழிகளில் எதற்கும் ஏன் ஒதுக்கப்படவில்லை என்பதை யோசிக்கையில்தான் பிரச்சினை புரிய வரும்.

**விடுபடல்களும் விளக்கங்களும்**

இந்த நூலில் இரா.நாகசாமி ‘சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் வேதங்களையும், அவற்றின் சாரத்தையும் தமிழில் அளிப்பதாகக் குறிப்பிட்டனர்’ என்ற பதிவின் மூலம் தனது வேதமுதன்மைக் கருத்துக்கு வலு சேர்க்க முற்படுகிறார். இதனோடு ஒத்துப்போவதைப் போலிருக்கும் கா.சிவத்தம்பியின் மேற்கோளினைத் தேவ.பேரின்பன் எடுத்தாண்டுள்ளதானது இரா.நாகசாமியின் கருத்தினை வழிமொழிவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்துகிறது. ஆனால் சைவ, வைணவ பக்தி இலக்கியங்களின் மீது முழுமையான வைதிக அடையாள முத்திரையிடுவது அதன் அடிப்படைக்கே எதிரானதாகும். பக்தி இலக்கியத்தின் முதன்மையான கூறுகளாக சமக்கிருதத்தை முற்றிலும் சாராது, பெருமளவு தமிழ் ஓர்மை சார்ந்த தன்மை, வேத முதன்மையினைக் கிளிப்பிள்ளைப் போல் கூறாத, அதனைத் தாண்டிய கருத்தாக்கங்களுமே ஆகும். பின்வருவனவற்றை இவை சான்றுக்காகக் காணலாம்.

**‘காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி**
**ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது**
**வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது**
**நாதன் நாமம் நமச்சிவாயவே.....!** **– சைவம் (திருஞானசம்பந்தர் தேவாரம்)**
**ஐந்தாவது வேதம் ‘வேதமே நீ’** **– வைணவம்**

மேற்கண்ட காரணங்களால்தானோ என்னவோ முகலாய அரசுக் காலங்களில் உருவாகத் தொடங்கி, ஆங்கிலக் காலனிய அரசுக் காலத்தில் வளர்த்தெடுக்கப்பட்ட ’பிராமணர்’ என்னும் ஒற்றை அலகினாலான அடையாள அரசியலில் இன்றளவும் தமிழ்நாட்டு சைவ, வைணவ, ஐயர், ஐயங்கார்கள், பெரிய முக்கியத்துவம் எதுவும் பெற்றுவிடாதவண்ணம் கவனமாகப் பார்த்துக் கொள்ளப்படுவது தொடர்கிறது.

ஜெர்மானியரான மாக்ஸ்முல்லரின் சமக்கிருத ஆரிய மேன்மைவாதத்தையும், இத்தாலியரான ராபர்ட் கால்டுவெல்லின் திராவிட/தமிழ் எதிர்நிலை சமவாதத்தையும் மட்டுமே கொண்டு இத்துணைக்கண்ட வரலாற்றை அணுகுகிற பார்வை முழுமையானதில்லை. உலகமயமாக்கல் போல ‘சமக்கிருதமயமாக்க முயற்சி’ என்பது தமிழ்நிலத்தில் பல்லவர் காலத்தில் அறிமுகமாகி தொடர்ந்து நடைபெற்று வருவதாகும். ஆனால், பிறமொழி தேயங்களில் சமக்கிருதமயமாக்க நிகழ்வானது பெற்ற முழு வெற்றி இங்கு வெறுமனே அடையாளமாக மட்டுமே நிலைக்க முடிந்துள்ளது. சமக்கிருத எதிர்ப்பு, தனித்தமிழ்க்குரல் போன்றவற்றினை காலனிய காலத்தோடும் கால்டுவெல்லின் திராவிட சிந்தனையின் தாக்கத்தோடும் இணைத்தே தேவ.பேரின்பன் பார்த்துள்ளார். ஆனால், பக்தி இயக்க காலக்கட்டத்தில் அதாவது ஆங்கிலேயர்

வருகைக்கு ஆயிரமாண்டுகளுக்கு முன்பே தமிழ்ச் சமூக வெளியில் அத்தகைய போக்குகள் இருந்துள்ளதைக் காணமுடியும்.

**‘ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்’– சைவம் (திருநாவுக்கரசர் தேவாரம்)**
**‘திராவிட வேதம்’ — வைணவம்**
**‘முத்தமிழ் கற்று முயங்குவோருக்குச்**
**சத்தங்கள் எதற்கடி குதம்பாய்’ — குதம்பைச் சித்தர்**
**(சத்தம் = சப்தம் = சமக்கிருதம்)**

இப்படி வேண்டுமானால் சொல்லலாம். பக்தி இலக்கியக் காலகட்ட சைவ, வைணவத்தின் குரல், சித்தர்களின் குரல் எனப் பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து இயங்கிய தமிழ்ஓர்மையின் நீட்சியாகவும், அதன் நவீன அரசியல் வடிவமாகவும், தனித்தமிழ் இயக்கம், திராவிட இயக்கம் போன்றவற்றைக் குறிப்பிட முடியும்.

அடிப்படையில் இருவேறு சமயங்களான சைவத்தையும் வைணவத்தையும் இன்றைய ’இந்து’ என்கிற ஒற்றைப்படுத்தப்பட்ட மதப் பார்வையின் ஊடாகக் காண்பதால் ஏற்படும் பிரச்சனையே. சைவத்தையும் வைணவத்தையும் ஒரு பொதுக்கட்டமைப்புக்குள் கொணர மதுரையை ஆண்ட மன்னர் திருமலை நாயக்கர் எடுத்த முயற்சியே சித்திரைத் திருவிழா. மீனாட்சித் திருக்கல்யாணம் என்னும் சைவத் திருவிழாவையும், கள்ளழகர் ஆற்றில் இறங்கும் வைணவத் திருநாளையும் ஒரே மாதத்தில் ஒரே இடத்தில், இரு சமய நிகழ்வும் ஒன்றாக நிகழ்வது போல் மாற்றியமைத்த முயற்சியின் தொடக்கமாகக் கொள்ளலாம்.

**இன்று வேண்டுவன**

தேவ. பேரின்பன் நூலினை முன்வைத்துச் சில அடிப்படைப் புள்ளிகளைக் கவனத்தில் கொள்ள முடியும். இதுவரை சமக்கிருதம் என்பதை வேத, பிராமணியத் தொடர்ச்சியாக மட்டுமே பார்க்கப்படுகிற பார்வையோடு சமண, பௌத்த சமயங்கள் சார்ந்தும் காண வேண்டி உள்ளது. மேலும் நமது கருத்தியல்கள், உரையாடல்கள், ஆய்வுகள் போன்றவற்றை மதம், அறிவியல் இரு என்னும் அடிப்படை அலகுகளில் எந்த ஒன்றினைக் கொண்டு அணுக விரும்புகிறோம் என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டியது அத்தியாவசியமானதாகும். மதம் என்றால் நம்பிக்கை, புனைவு, விளைவுகளின் மீதான முத்திரை என்பதாக அவை விரியும். அறிவியலே எனில் தரவுகள், சான்றுகள் நிரூபணமாகிற கூறுகள் போன்றதாக மட்டுமேயிருக்க முடியும். ஏனெனில், இந்த நூலிலேயே இரா. நாகசாமியும் தேவ.பேரின்பனும் சிலவற்றை ஒரேவிதமாக அணுகியுள்ளது எவரையும் அதிர்ச்சியடையச் செய்துவிடும். அப்படியானால் சமூக இயங்கியல் குறித்தான புரிதலில் நாம் இன்னும் மிக நீண்ட தொலைவு நகர வேண்டி உள்ளதாகத்தானே பொருள்படும். இரா. நாகசாமி தமிழின் அறமானது வேதங்களின், பிராமணர்களின் கொடையால் மட்டுமே விளைந்தது என்கிறார். இதனை மறுத்துரைத்து நூலெழுதும் மார்க்சியரான தேவ. பேரின்பனோ தமிழின் அறமானது சமண, பௌத்த சமயங்களின் கொடை என்கிறார். முன்னது தவறு என்கிறபோது பின்னதும் தவறுதானே! பிறகு, எப்படி இந்த முடிவுக்குத் தேவ.பேரின்பன் வருகிறார்? அவருக்கு மட்டுமல்ல இன்றளவும் திராவிட, தமிழிய ஆய்வுகளில் உள்ள சில அறிஞர்களிடமும் இத்தகைய போக்கு உள்ளதைக் காண முடியும். மத நம்பிக்கை அடிப்படையில் எவரும் எதனையும் எவ்விதமாகவும் சொல்லலாம். ஆனால் ஆய்வு என்பது அத்தகையதல்ல.

மக்களின் கூட்டு உழைப்பு, கூட்டு புரிதல், கூட்டு ஏற்பு மற்றும் ஒத்திசைவின் காரணமாகத் தொடர்ந்து பயன்படுத்தப்படுவதின் விளைவாகவே உலகிலுள்ள எந்த மொழியின் உருவாக்கம் மற்றும் அதன் இயங்கியல் உள்ளதை அறியலாம். இதில் மக்கள் மரபுக்கும், நிறுவனச்

செயலுக்குமான வேறுபாடு கவனிக்கப்படாத தன்மையும் உள்ளது. வைதிகம், சமணம், பௌத்தம், ஆசீவகம், சைவம், வைணவம் என சமயங்கள் எதுவாயினும் அவற்றின் அடிப்படையில் மனித உடல்களை அடையாளப்படுத்துதல் மத அரசியலுக்குத் துணை செய்வதாகவே இருக்கும். தமிழ் நிலத்தில் அறிவுச் சமூகம் புதிரானதேயாகும். சமயம்/மதம் குறித்துக் கொண்டிருக்கும் கருத்துக்களையும் இரண்டு விதமாக விளங்கிக் கொள்ளலாம். ஒன்று மேலிருந்து கொடுக்கப்பட்டவை என்னும் மத நம்பிக்கை அடிப்படையிலான பார்வை. மற்றொன்று அவை உருவான நிலத்தினுடைய மக்களின் கூட்டு நினைவுகள் மற்றும் காலச்சூழல் ஆகியவற்றின் தொகுப்பிலிருந்து வளர்த்தெடுக்கப்பட்டவை என்கிற அறிவியல்பூர்வமான அணுகுமுறை. முதல் வகையினர் மட்டுமே எதனையும் சமயங்களின்/ மதங்களின் கொடை என்று பேச முடியும். ஆனால் இரண்டாம் வகையினரும் அவ்வாறே பேசுவது தமிழில் தான் சாத்தியம். ஒரு பண்பாட்டு நடவடிக்கை என்பது இரு வழிப்பாதை என்பதுதான் அறிவியல். அப்படியானால் இங்கிருந்து சென்றவை எவையெவை என்பதையும் கண்டறிந்து சொல்லும்போதுதான் அவர்தம் ஆய்வுமொழி முழுமையாக முடியும்? மதங்கள்தான் மனிதருக்கு அறிவையும், அறத்தையும் வழங்க முடியுமெனில், அவற்றிற்கு அவை எங்கிருந்து கிடைத்தன? அவை எந்தச் சமூகத்தின் அறிவுத்திரட்சி? போன்ற எளிய கேள்விகள் கூட எழாதது ஒரு சமூகத்தின் அறிவுத்தேக்கமேயாகும்.

உலகெங்கிலும் மனிதர்கள் தங்களின் கூட்டு உழைப்பால் உருவாக்கிய மொழிகளின் தொடர்ச்சியாகத் தங்களுடைய கருத்துப் பரிமாற்றக் கருவியாக்கியதன் வழியே தத்தம் சமூக இருத்தலைப் பேணியதோடு, அதனைத் தமது பண்பாட்டு நடவடிக்கையாகவும் மாற்றிக் கொண்டதால் அவர்களது அடையாளமாகவும் மொழி மாறிப் போனது. வரலாற்றில் மனிதர் தாம் உருவாக்கிய மொழி வழி அழைக்கப்பட்டு வந்துள்ளனர். இதுவும் 'மக்கள் மொழி' என்பதற்கான எளிய வரலாற்றுச் சான்றாகும். அவ்வாறு ஒரு மொழியின் பெயரால் எந்த மனிதரும் அழைக்கப்படவே இல்லையெனில் அது என்றுமே மக்களின் மொழியாக இருந்திருக்க வாய்ப்பேயில்லை என்பதும் விளங்கும். ஏனெனில், வாழ்வியலோடு நேரடித்தொடர்பு இல்லாத செயற்கை மொழிகளின் பெயரால் உயிருள்ள மனிதர் அடையாளப்படுத்தப்படுகிற சாத்தியம் கிடையாது. எனவே, சமக்கிருதமொழியானது இலக்கியத்திற்காகச் செய்யப்பட்ட ஆவண மொழியான (Programmic Language for Literature / Documentation Language) மட்டுமே என்பதை அறியலாம். சமக்கிருதம் புனிதமொழி, மந்திரமொழி, ஆவணமொழி என எப்படி வேண்டுமானாலும் அழைக்கப்படட்டும். ஆனால் தமிழ் மக்கள் மொழி அவ்வகையில் மக்கள் மொழிகளை மக்கள் மொழிகளோடும் செய்யப்பட்ட இலக்கிய மொழிகளை அவ்வாறு உருவாக்கப்பட்ட மொழிகளோடும் ஒப்பிடுவதே சரியான அறிவியல் அணுகுமுறையாக இருக்க முடியும் என்ற அடிப்படையில் உரையாடல்களை விரிக்க வேண்டும்.

**நிறைவாக...**

சமக்கிருதத்தினை வைதிகம்/பிராமணியம் சார்ந்த தன்மை என்பதையும் கடந்து சமணம், பௌத்தம், வைதீக எதிர்ப்பு போன்றவற்றோடு நெருங்கிய தொடர்புடையது என்கிற உண்மையும், சமக்கிருதம் தெற்கில் உருவாகி வடக்கு நோக்கிப் பரவியதே என்னும் கருத்தியல் வலுப்பெற்று கவனிக்கப்படும் வருகிற சூழலில், இலக்கியங்களைப் போலவே சொல்லப்பட்ட பலவற்றையும் அறிவு மரபின் துணைகொண்டு மறுவாசிப்பு செய்ய வேண்டிய தேவையுள்ளது.

அதற்கு ஆகச்சிறந்ததோர் எடுத்துக்காட்டு ஈழம் குறித்தானதாகும். நான்கு தசாப்தங்களாக இலங்கைப் பிரச்சனை குறித்து வெவ்வேறு அரசியல் நிலைப்பாடுகளைக்

கொண்டிருப்போரால் பயன்படுத்தப்பட்ட அடிப்படைப் பகுப்போ ஒன்றாகவே இருந்துள்ளது. அந்தத் தீவினைச் சுட்டுகிற பெயர்கள் ஈழம், இலங்கை, லங்கா, ஸ்ரீலங்கா என மாறுபட்ட போதும் தீவிலுள்ள மக்களைச் சுட்டுகையில் மட்டும் பலரும் ஒரே விதமாகச் சிங்களர், தமிழர், முஸ்லிம்கள் என்பதாகவே குறிப்பிட்டு வருகின்றனர். இது எந்தவிதமான அறிவியல்பூர்வமான பார்வையுமின்றி பகுக்கப்பட்டதே ஆகும். வன்மமாக செய்யப்பட்ட இந்த அறிவு மோசடியானது எந்தவிதமான கேள்வியுமுற்று இன்றுவரை பயன்படுத்தப்பட்டு வருவதைக் காணலாம். மொழி அடிப்படையில் எனில் பௌத்தர், சைவர், இசுலாமியர், கிறித்தவர், மதமற்றோர், பழங்குடிகள் என்றே அழைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் திட்டமிட்டு மொழிரீதியாகவும் இல்லாமல் மதரீதியாகவும் இல்லாமல் செய்யப்பட்ட இந்தச்சதியானது ஈழத்தமிழர்களின் தேசிய இன அடையாளத்தை அழிக்கவும், அவர்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் காட்டவும் பயன்படுத்தப்பட்ட உத்தியானது மக்கள் விரோத வன்தாக்குதலே. அந்த எழுத்தில் தொடங்கிய எண்ணிக்கை அழிப்பு களத்தில் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் இனப்படுகொலையினால் கொல்லப்பட்ட பின்பும் தொடரவே செய்கிறது.

கட்டுரையும் கட்டுக்கதையும் (பிரேம்–ரமேஷ்) நூலிலுள்ள வாக்கியங்கள் சிலவற்றுடன் இக்கட்டுரையினை நிறைவு செய்தல் உரையாடல் வெளியினை ஆழமாக்கும்.

தமிழ் ஒரு மொழி அடையாளமாக மட்டும் என்றும் இருக்க முடியாத மொழியாகவே இருந்து வருகிறது. எல்லா மொழிகளுக்கும் மொழி என்பதற்கு மேல் பண்பாடு, அரசியல், சமூகம் என்ற வேறு அடையாளங்களும் உண்டு. இன்றைய புரிதலில் மொழியென்பது மனமும், உடலும், வாழ்வும் என விரிந்த பொருள் தரக்கூடியதாகப் புலப்பட்டிருக்கிறது. ஆனால் 'தமிழ்' என்பது இவற்றிலும் கூடுதலான உள்ளடக்கங்களைக் கொண்டு விட்டது. இது கொண்டுள்ள கூடுதலான அர்த்த அடர்த்திக்கு இதன் தொன்மை ஓர் அடிப்படைக் காரணம் என்பது நமக்குத் தெரியும். ஆனால் இதன் தொன்மையையும் மீறி தமிழ் நமக்கு வேறு பல நினைவுகளைக் கொண்டு வருகிறது. மொழியென்றால் அது நினைவுத் தளத்திலும் நினைவுள் தளத்திலும் நினைவிலித் தளத்திலும் படிந்து கிடப்பது. ஒரு பேச்சில் மட்டுமின்றி மௌனத்திலும் அம்மொழியே நிறைந்து நிற்கிறது. மௌனத்தை 'உலகப் பொதுமை' என்பவர் உண்டு; ஆனால் தமிழரின் மௌனம் தமிழ் மௌனம். வேறெந்த மொழியின் மௌனத்தைப் போலத் தனித்தன்மை உடையது. அது தமிழ்க்கூறுகளால் ஆனது. தமிழின் இலக்கியங்கள் இவ்வகையில் பலநூறு தமிழ் மௌனங்களால் நிறைந்து கிடைக்கின்றன.

தமிழ் இன்றுள்ள உலகமொழிகள் சிலவற்றிற்கு ஈடான தொன்மை வாய்ந்தது. அதே சமயம் அவற்றைவிட அதிகமான இலக்கியங்களை உடையது. இதன் கால நீட்சியை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைப்பதற்கான செயல்கள் தொடர்ந்து நடந்து வந்துள்ளன. அதே சமயம் 'கல் தோன்றி மண் தோன்றாக் காலம்' என இதற்கொரு வரலாறு கடந்த தன்மையும் ஏற்பட்டுள்ளது. இது ஒரு அரசியல் போராட்டம் என்று தான் சொல்ல வேண்டும்.

சமக்கிருதத்திற்கு ஈடாக இந்திய மொழிகளில் எதுவும் வைக்கப்படக் கூடாது என்பதில் குறியாக இருக்கும் வரலாற்றாசிரியர்கள், சிந்தனையாளர்கள் தமிழைச் சமக்கிருதத்தின் கிளைமொழியென்று கூறும் அளவுக்குச் சென்றுள்ளனர். இவர்களைப் பொறுத்தவரை இந்திய மொழிகள் அனைத்திற்கும் சமஸ்கிருதமே 'தாய்மொழி'. இதற்காக அவர்கள் வரலாற்றை எந்த அளவுக்கும் திரிக்க ஆயத்தமாக இருந்து வந்துள்ளனர்.

இந்திய வரலாற்றை எழுதவும் தொகுக்கவும் முனைந்த எவரும் 'தமிழகம்' என்பதைப் பற்றி எழுத ஒரு சிறு அத்தியாயம் மட்டுமே ஒதுக்கத் தயாராக இருந்தனர். தமிழ்மொழி, தமிழ்நிலம் என்பது ஒரு பரந்த சிக்கலான பெரும் பரப்பு என்பதை ஏற்றுக் கொள்ள அவர்கள்

பக்குவம் கொண்டிருக்கவில்லை. இதனை மேம்போக்காக விட்டுவிடலாம் என்ற பக்குவம் நமக்கு எப்படியோ வாய்த்து விட்டது. ஆனால் அவற்றைத் தொடர்ந்து வாசிக்கும் போது இது எப்படிப்பட்ட வன்முறை, கொடூரம், திமிர்த்தனம் என்பது மீண்டும் மீண்டும் வலிமைப்பட்டு உறைத்து உறுத்தத் தொடங்கிவிடும். தற்காலத்தில் என்றால், இதற்கு முன் வரலாற்றின் ஒவ்வொரு கால கட்டத்திலும் தமிழ் தன்னைத் தனியாக, தூய்மையாக வைத்துக் கொள்ளப்பட்ட பாடுகள் வலி நிரம்பியவையாக உள்ளன. இன்று தமிழ் உள்ளது. ஆனால் தமிழ் நிலம் இல்லை. நிலமும், பொழுதும், தெய்வமும், உணவும், விலங்குகளும், மரம் செடி கொடிகளும், பறவைகளும், தோற்கருவிகளும், தொழிலும், யாழும், ஊரும், நீரும், பூவும், இல்லாத தமிழ் நிலத்தில் தமிழ் இருக்கிறது. தமிழுக்குள் இவை மறைந்து உள்ளன. இவற்றை மீட்டுக் கொண்டு வர தமிழ் நமக்கு அருளும். தன்னைக் காத்துக் கொண்ட தமிழுக்குத் தன் மக்களைக் காக்கும் அன்பும் ஆற்றலும் இல்லாமல் போகுமா என்ன?